1974 மார்ச் 18]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) தலைவரவர்களே, இது வெட்டிவேர் பற்றியது. கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டத்திலும், தஞ்சை மாவட்டம் கொள்ளிடம் வட்டத்திலும், சேலம் மாவட்டம் ஏற்காடு மலையிலும், ஆனைமலை, நீலகிரி முதலிய இடங்களிலும் இது சாகுபடி செய்யப்படுகிறது.

(இ) இல்லை.

(உ) இல்லை.

திரு. எம். டென்னிஸ் : தலைவரவர்களே, இது "மெடிசனல் வால்யூ" கொண்டதாக இருக்கிறது. இது அதிகமாக எல்லா இடத்திலும் உற்பத்தி ஆவதில்லை. அதற்காக அரசு ஊக்கம் கொடுப்பதாகவும் இல்லை. ஆகவே, இன்டென்சிவ் முறையிலும், எக்ஸ்டென்சிவ் முறையிலும் இதை உற்பத்தி செய்ய அரசு திட்டம் வகுத்து செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, எந்த அடிப்படையில் பயிர்களுக்கு விவசாயத்துறை ஊக்கம் அளிக்கிறது என்றால், விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு ஆண்டுக்கு வருவாய் அதிகமாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது இந்த வெட்டிவேர் சாகுபடி செய்வதில் அவ்வளவு வருவாய் உள்ளதாக இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே விளவங்கோடு வட்டத்தில் ஒரு ஏக்கருக்கு என்ன கிடைக்கிறது என்று சற்றுப் பார்த்து அனுப்பினால், நல்ல வருவாய் இருந்தால், இதையும் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, இந்த வெட்டிவேர் சாகுபடிக்கு அரசாங்கம் எந்த எந்த வகையில் ஊக்கம் அளித்து வருகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, விடையில் (இ), (உ) இல்லை என்று சொல்லியிருக்கிறேன்.

ஏலக்காய் உற்பத்தி.

*483. வினா. திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலக்காய் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(இ) சேலம் மாவட்டம் கொல்லி மலையிலும், நெல்லை மாவட்டம் குற்றாலத்திலும் உள்ள இரண்டு ஏலக்காய் நாற்றுப் பண்ணைகளிலிருந்து நோயற்ற ஏலக்காய் நாற்றுகள் வழங்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த ஏலக்காய் அதிகமாக கேரளத்தில்தான் உற்பத்தியாகிறது. இப்பொழுது தமிழகத்திலே, அமைச்சரவர்கள் சொன்னதைப்போல் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பகுதியிலும், "கம்பம் வேலி"யிலும்தான் செய்கிருர்கள். இதை மற்ற மலைப்பிரதேசங்களிலும், நீலகிரி, சேர்வராயன் மலை போன்ற இப்படிப்பட்ட பகுதிகளில் இந்த ஏலக்காய் உற்பத்திக்கு ஏற்பாடு செய்யப்படுமா? இந்த "கார்டமம்" உற்பத்தியில் மூன்று வருஷங்களிலே பலன் கிடைக்கிறது என்றும், 10 ஆண்டு, 20 ஆண்டு தொடர்ந்து அதில் பலன் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது. மேலும் இது "பாரின் எக்சேஞ்ச்" கிடைக்கும் பொருளாகவும் இருப்பதால் சர்க்கார் இதில் அதிக கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இந்த ஏலக்காய் சாகுபடி கேரளாவில் மட்டுமல்ல, மேற்குத் தொடர்ச்சி மலையில், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பயிராகிறது. தமிழ்நாட்டிலே, மதுரை, கோவை, நெல்லை ஆகிய மாவட்டங்களில் இது பயிர் செய்யப்படுகிறது. இது ஏறத்தாழ 3,000 அடிக்குமேல் 4,000 அடி வரையுள்ள மலைகளில்தான் பயிராகிறது. எனவே, இதற்குத் தேவையான அளவு அரசு ஊக்கம் அளித்து வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா: இந்த ஏலக்காய் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்கக்கூடிய பொருள். எப்படி உருளைக் கிழங்கைச் சம வெளிகளிலும் பயிரிடலாம் என்று ஆராய்ச்சி செய்து புதிதாக ஹைபிரிட் வெரைடிகளைக் கண்டு பிடித்தார்களோ அதே போல் ஏலக்காயையும் மலைப் பிரதேசங்களில் அல்லாது சமவெளிகளிலும் பயிர் செய்ய இனி மேலாவது ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: நம் அரசுத் துறையில், விவசாயத் துறையில் இருந்து ஊக்கம் கொடுப்பது முக்கியமானது. எந்தப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு அதிகமான வருவாய் விவசாயிக்குக் கிடைக்குமோ அதற்கு முக்கியமான ஊக்கத்தைக் கொடுத்து வருகிருேம். ஏலக்காய் பாரின் எக்ஸ்சேஞ்ச் சம்பாதிக்கிறது என்பது உண்மை. வெளி நாட்டு நாணயம் எவ்வளவு சம்பாதித்தாலும்கூட நமது விவசாயிக்கு ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு கிடைக்கும் என்பதை முக்கியமாகப் பார்க்க வேண்டும். மகசூல் தர நான்கு ஆண்டுகள் ஆகும். அதற்குப் பிறகு பல ஆண்டுகள் மகசூல் கொடுத்துக் கொண்டு வரும். ஒரு ஹெக்டாருக்கு-2½ ஏக்கருக்கு 100 கிலோதான் கிடைக்கிறது. ஏக்கர் என்று கணக்குப் பார்க்கும்போது இதைவிட அதிக வருவாய் வரக்கூடிய பயிர்களுக்கு முக்கியமாக ஊக்கத்தைக் கொடுத்து வருகிருேம். இருந்தாலும் கூட இரண்டு இடங்களில் இதற்காக நாற்றுக் கொடுத்து வருகிருேம்.

1974 மார்ச் 18]

திரு. நா. வீராசாமி: ஏலக்காய் கோடைக்கானல், ஊட்டி போன்ற மலைப் பகுதிகளில் 3,000 அடி, 4,000 அடிக்குமேல் தான் விளையும் என்று சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரி என்ற மலையே இருக்கிறது. பண்டைக் காலத்தில் ஏலக்காய் அங்கு நிறைய விளைந்த காரணத்தால் அதற்கு ஏலகிரி என்ற பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். இப்போது ஏலக்காய் அங்கு பயிராவதில்லை. அந்த மலை நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்ன மூவாயிரம் அடிக்கு மேல் இருப்பதால், அங்கு ஏலக்காய் பயிரிட சிறப்புத் திட்டத்தை அரசு நிறைவேற்ற முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பெயர் ஏலகிரி என்று இருந்தால் மட்டும் ஏலக்காய் விளைந்துவிடும் என்று நான் நம்பவில்லை. அரசுத் துறையிலிருந்து ஏலக்காய் அங்கு விளைவிக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்து ஏக்கர் ஒன்றுக்கு அதிகமான வருவாய் வருமா என்றும் ஆராய்ந்து பார்த்து அதற்குத் தகுந்த இடமாக இருந்தால் அதைச் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு பகுதியாகிய கன்னியாகுமரிக் காடுகளில் ஏலக்காய் பயிரிடுவதை ஒரு பைலட் ஸ்கீமாக ஒப்புக்கொண்டு செய்ய அரசாங்கம் முன்வருமா? அரசாங்கத் தரப்பிலிருந்து ரப்பர் தோட்டம் கீழ்ப் பகுதியில் போட்டிருக்கிறார்கள். மேல் பகுதியில் ஆராய்ச்சி செய்து ஏலக்காய் பயிரிட முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏலக்காய் விளையும் என்பதில் ஐயம் இல்லை. ஏனென்றால் அங்கு உயரமான மலைகள் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் விளைவித்து வருகிறார்கள். அதை விட இதிலே அதிக வருவாய் வருமா என்பது ஒரு கேள்வி. ஏலக்காயோடு வேறு பயிர் சேர்த்து பயிர் செய்ய முடியுமா என்றும் பார்க்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் என்ன செய்யமுடியும் என்று ஆராய்ந்து பார்த்து விரிவுபடுத்த முடியுமா என்று சொல்லுகிறேன்.

சேரன்மகாதேவி ஒன்றியத்தில் உர விநியோகம்.

* 484 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி பஞ்சாயத்து யூனியனில் உள்ள விவசாய டிப்போவிற்கு 1972-ம் ஆண்டு, அக்டோபர் முதல் டிசம்பர் வரை எவ்வளவு உரம் வரவழைக்கப்பட்டது?

(இ) அது விவசாயிகளுக்கு எந்த அடிப்படையில் விநியோகம் செய்யப்பட்டது?